# THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No.120/2019** | **PW.4** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | : திரு.கென்னடி | |
| Father's Name | : திரு. அந்தோணிமுத்து | |
| Village | : கள்ளிகுளம் | |
| Taluk | : ராதாபுரம் | |
| Employment | : வியாபாரம் | |
| Age | : 58 | Date:17.02.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused A1 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed. Accused A2 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed. Accused A3, A4 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed.)**

**முதல் விசாரணை :-**

1. நான் கள்ளிகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். 19.08.2014 ஆம் தேதி மாலை 4.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்த வள்ளியூர் போலீசார் எங்கள் முன்னிலையில் வழக்கின் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் ஆய்வு செய்து பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நானும், அற்புதராஜ் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த பார்வை மகஜர் முழுவதும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. நீங்கள் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து கொடுத்தீர்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் விசாரணை சம்பந்தமாக காவல்

நிலையத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். காவல் நிலையத்தில் போலீஸார் என்னை விசாரிக்கவில்லை. போலீஸார் கேட்டுக் கொண்டதன் பேரில் கையொப்பம் செய்து கொடுத்தேனா என்றால் போலீஸார் விபரம் கேட்டு, என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். போலீஸார் என்னிடம் கையொப்பம் போட சொன்னதால், நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**2 முதல் 4 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3. 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை 2 முதல் 4வது எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**மறு விசாரணை :–**

4. இல்லை.

THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No.165/2019** | **PW.4** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | : திரு.ஜான் | |
| Father's Name | : திரு.கணேசன் | |
| Village | : வள்ளியூர் | |
| Taluk | : ராதாபுரம் | |
| Employment | : செக்யூரிட்டி | |
| Age | : 63 | Date:17.02.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused present.)**

<u>முதல் விசாரணை</u> :—

1. நான் வள்ளியூரில் குடியிருந்து வருகிறேன். நான் வள்ளியூர் அசோகா ஜவுளி கடையில் செக்யூரிட்டியாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. **(சாட்சி எதிரியை பார்த்து தெரியாது என்று அடையாளம் காட்டுகிறார்).** என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **(பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆகவும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** போலீஸார் கேட்டுக் கொண்டதன் பேரில் கையொப்பம் செய்தேன். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **(நீதிமன்ற கேள்வி— யாராவது உங்களை மிரட்டினார்களா என்றால் என்னை யாரும் மிரட்டவில்லை. நானாகவே சாட்சியம் அளிக்கிறேன்.)**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை**

**செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2. போலீசார் விசாரணையில் கடந்த 26.05.2017 ஆம் தேதி 18.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடத்திற்கு வந்த வள்ளியூர் காவல் உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் வழக்கின் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் ஆய்வு செய்து பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், பரமசிவன் என்பவரும் கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றும், அதே நாள் 20.00 மணிக்கு வழக்கின் எதிரியிடமிருந்து இரண்டு சேலைகள் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றப்பட்டது என்றும், அதிலும் நாங்கள் இருவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு வேண்டி உண்மையை மறைத்து அரசுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

3. இல்லை.